**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.221/2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw2 |
| Name | : Athavan |
| Father/Husband's Name | : Ami |
| Village | : |
| Taluk | : Singaperumal Kovil |
| Calling | : |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.10.2025.

**முதல் விசாரணை:**

நான் Unity Forging என்ற நிறுவனத்தில் வேலை செய்கிறேன். கடந்த 13.02.2023ம் தேதி நானும், செல்வமும் Unity Forging என்ற நிறுவனத்தில் வேலை செய்தோம். காலை 9 மணியளவில் எங்களுக்கு பணி ஆரம்பித்தது. 9.30மணயளவில் எனது சுப்பர் வைசர் ரவி அழைத்தார். எங்களை அழைத்து மிஷின் பழுது பார்க்கும்படி சொன்னார். நானும் , செல்வமும் வேலை செய்து கொண்டிருக்கும் போது, கதவில் மாட்டி இருந்த சங்கலி அறுந்துவிட்டது. அதனால் அதனுடன் இருந்த கனமான பொருள் கீழே விழுந்தது. நான் வலதுபக்கம் சென்றுவிட்டேன். செல்வம் நேராக சென்றதால் அவர் மீது அந்த கனமான பொருள் விழுந்துவிட்டது. நானும், செல்வமும் தலைகவசம் அணிந்து இருந்தோம். எங்களது சுப்பர் வைசர் ரவி அழைத்ததால் தான் நாங்கள் அங்கு சென்றோம். செல்வத்தை 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அன்றைய தினமே மாலை 4 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் தற்போதும் Unity Forging என்ற நிறுவனத்தில் தான் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் 20 வருடமாக அங்கு வேலை செய்கிறேன். செல்வம் எனக்கு எவ்வாறு

தெரியும் என்றால் அவர் என்னுடைய நண்பர். எந்த தேதியில் செல்வத்திற்கு விபத்து ஏற்பட்டது என்றால் 13.02.2023. நானும், செல்வமும் அன்றைய தினம் வேலைக்கு சென்றோம் என்றால் காலை 9 மணி ஷிபிட்டிற்கு சென்றோம். எனது நிறுவனத்தில் வருகை பதிவேடு வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் அதில் கையெழுத்து போட்டேனா என்றால் பெயர் எழுதி, நேரத்தை மட்டும் தான் குறிப்பிடுவோம். சம்பவ தேதியன்று நானும், செல்வமும் எத்தனை மணிக்கு வேலை செய்ய ஆரம்பித்தோம் என்றால் 9.30 மணியளவில் வேலை செய்ய ஆரம்பித்தோம். போலீசார் விசாரணையில் 8 மணிக்கு வேலை சென்றதாக சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. 9 மணி ஷிப்ட் 8.30 மணிக்கு உள்ளே சென்றுவிடுவோம் என்று சொன்னேன். சம்பவ தேதியன்று ரவிகுமார் , எனக்கு செல்வத்திற்கு என்ன வேலை சொன்னார் என்றால் மேலே இருக்கும் கதவை கீழே இறக்க சொன்னார். அப்போது நானும், செல்வமும் பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்திருந்தோம் என்றால் சரிதான். ரவிகுமார் சொல்லி தான் வேலை செய்ய ஆரம்பித்தோம் என்றால் சரிதான். எதிரி குமார் சம்பவ தேதியன்று நிறுவனத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் செல்வம் பாதுகாப்பு உபகரணங்கள் அணியாமல் இருந்ததை குமார் கவனிக்க தவறிவிட்டார் என்று சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. அந்த சம்பவத்தின் போது எனக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. செல்வத்திற்கு விபத்தின் போது எங்கு எங்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் கால், நெஞ்சு மற்றும் தலையில் காயங்கள் ஏற்பட்டது. எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் 9.40 மணிக்குள் விபத்து ஏற்பட்டது. நானும், செல்வமும் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் கால் மணி நேரத்தில் விபத்து ஏற்பட்டது. சம்பவ தேதியன்று ரவிகுமார் வேலைக்கு வந்தார் என்றால் சரிதான். செல்வத்திற்கு விபத்து ஏற்பட்டவுடன் யார் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தது என்றால் கம்பெனியிலிருந்து கால் செய்துவிட்டார்கள். செல்வத்தின் வீட்டிற்கு யார் போன் செய்தது என்றால் நான் தான் அவரின் மனைவிக்கு போன் செய்தேன். செல்வத்தின் மனைவி பெயர் தெரியுமா என்றால் சித்ரா. எனக்கு குடிபழக்கம் இருந்ததா என்றால் இல்லை. நான் அந்த மிஷினை பழுது பார்த்து கொண்டிருந்த போது நானும், செல்வம் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான். சம்பவத்தின் போது என்ன நடந்தது என்றால் கதவை இறக்கும் போது, சங்கலி அறுந்து இருந்தது. நானும், செல்வமும் அந்த இடத்தில் வேலை செய்யவில்லை என்றால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். நாங்கள் ரவிகுமாரை பார்க்கும்போதே பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்திருந்தோம் என்றால் சரிதான். அந்த கதவின் சங்கலி 2 மாதங்களாக வேலை செய்யாமல் இருந்ததால் பழுதாகி இருந்தது என்றால் சரிதான். நானும், செல்வமும் அஜாக்கிரதையாக இயந்திரத்தை கையாண்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு வேலை செய்யும் போது, விபத்து

ஏற்பட்டால் எங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்பது எங்களுக்கு தெரியும் என்றால் அவ்வாறு விபத்து எதுவும் இதுவரை ஏற்பட்டது இல்லை. செல்வத்திற்கு ஏற்பட்ட விபத்தை நான் நேரிடையாக பார்த்தேன் என்றால் சரிதான். நானும், செல்வமும் பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்திருந்ததால் எதிரி ரவிகுமார் அவருடைய வேலையை சரியாக செய்துள்ளார் என்றால் சரிதான். 13.02.2023 அன்று எதிரி குமாரை நான் நிறுவனத்தில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் விடுப்பில் இருந்தார். எத்தனை மணியளவில் செல்வம் இறந்தார் என்றால் 4 மணிக்குள் இறந்துவிட்டார். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன்.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.